பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 17 வியாழக்கிழமை 03.11.2022 கதிர் 361

### இனி இது ரகசியம் அல்ல!

‘குரங்கின் கைப் புண்’ என்பார்கள். அப்படி கூறுவதற்குக் காரணம் உண்டு. குரங்கு தன் கையில் புண்ணேற்பட்டால் அதை ஆற விடாது. மாறுவதற்கு அனுமதிக்காது. அடிக்கடி அதனைத் தானே சுரண்டிச் சுரண்டி பெரிய புண்ணாக்கி

☞ 2










# பொலிஸ் தடுத்ததும் போராட்டம் முடிந்தது

## எதிரணியின் எடுப்பு எடுபடவில்லை கொழும்பு ஆர்ப்பாட்டம் பிசுபிசுப்பு

கொழும்பு நவம்பர் 03

அரசுக்கு எதிரான போராட்டம் என்ற முன்னறிவிப்போடு பெருத்த எடுப்பு, ஆரவார ஏற்பாடுகளுடன் எதிரணி நேற்றுக் கொழும்பில் முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் களைகட்டவில்லை.

பொலிஸ் போட்ட தடுப்பு வேலியை - மனித சங்கிலியை - இடையூறை - உடைத்துக் கொண்டு தாண்ட முடியாமல் அந்தத் தடை வரை முன்னேறிய எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா உட்பட்ட கட்சித் தலைவர்கள் அத்தோடு மௌனமாக ஊர்வலத்தில் இருந்து வெளியேறினர்.

☞ 2

## பொலிஸாரின் தடையைக் கண்டித்து சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை

அமைதியான முறையில் ஒன்றுகூடுதல் உள்ளிட்ட தமது அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதற்கு போராட்டக்காரர்கள் அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை.


அமைதியான முறையில் ஒன்று கூடுதல் என்பது ஓர் உரிமையேயன்றி, அதுவோர் சலுகையல்ல. எனவே அந்த உரிமைக்கு இடமளிக்கவேண்டிய கடப்பாடு அதிகாரிகளுக்கு இருக்கின்றது என்று சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக் காட்டியுள்ளது.

நாட்டுமக்கள் மீது அரசாங்கத்தினால் பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், பயங்கரவாதத்தடைச் சட்டத்தை முழுமையான இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தியும் தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புக்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மாணவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும்

☞ 2

## ஆர்ப்பாட்டக்காரர்களின் உரிமைகளை மதியுங்கள்!

### அரசுக்கு அமெ. தூதர் அழுத்தம்



ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் உரிமைகளை பயன்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் இடமளிக்க வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

தனது டுவிட்டர் பதிவில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் ஜனநாயகத்திற்கு அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

பிரஜைகளின் உரிமைகளிற்கு ஆதரவளிப்பதற்கான தளத்தினை உறுதி

☞ 11

## கோண்டாவில் விபத்தில் காயமுற்றவர் பின் மரணம்

யாழ்ப்பாணம் கோண்டாவில் உப்புமடப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கோண்டாவில் மேற்கை சேர்ந்த எஸ். விக்னேஸ்வரன் (வயது 67) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்த முதியவர் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த பெண் மோதி விபத்துக்கு உள்ளானதில் முதியவர் படுகாயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மோசமான இரு பஸ் விபத்துகளில் மாணவர்கள் உட்பட 26 பேர் காயம்

நேற்று இடம்பெற்ற இரண்டு மோசமான பஸ் விபத்துகளில் 26 பேர் படுகாயமடைந்தனர். தெய்வாதீனமாக உயிரிழப்புகள் ஏற்படவில்லை.

ஹட்டன் கண்டி பிரதான வீதியில் நாவலப்பிட்டி மீபிடிய பிரதேசத்தில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் அதிவேகமாகச் சென்ற இரண்டு தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் பாடசாலை

☞ 11

## வடக்கில் சரணாலயம் அமைக்க அரசு முடிவு

வடக்கு மாகாணத்தில் ஆயிரம் ஏக்கர் அளவில் சரணாலயத்தை அமைப்பதற்கு பொருத்தமான நிலத்தை அடையாளம் காணுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு

☞ 11

## உள்ளூராட்சித் தேர்தலை உடன் அறிவிக்க தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழுத்தம்!

### ‘பவ்ரல்’ அமைப்பு வலியுறுத்துகிறது

கொழும்பு,நவ.03

அரசமைப்பின் 21ஆம் திருத்தம் நாடாளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றபோதும் புதிய ஆணைக்குழு நியமிக்கப்படும்வரை, உள்ளூராட்சி மன்ற தேர்தலை அறிவிப்பு செய்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு எந்த தடையும் இல்லை. அதனால் உள்ளூராட்சி மன்ற தேர்தலை விரைவாக அறிவிப்புச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹண ஹெட்டடி ஆரச்சி தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு அறிவிப்பு செய்யுமாறு தெரிவித்து தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே

☞ 11

## வரி அதிகரிப்புக் கிட்டவே கிட்டாது நோட்டு அச்சிடுவதுதான் தொடரும்

### அடித்துக் கூறுகிறார் ஐ.தே.கவின் எம்.பி. இரான் விக்கிரமரத்ன

கொழும்பு,நவ.03



அரசாங்கத்திடம் முறையான திட்டங்கள் இல்லை என்பதால் அடுத்த வருடமும் பணத்தை அச்சிட வேண்டிய நிலையே ஏற்படுமென எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வரவு - செலவு திட்டத்தில் பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீடுகளை குறைக்க

☞ 11

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டே இருக்கும்.

நமது தமிழ் அரசியல்வாதிகள் பலரும் அப்படித்தான்.

வெடுக்குநாறி மலை, குருந்தூர்மலை நெருக்கடிகள் போன்றவற்றை அமைச்சர்கள் டக்ளஸ், விஜேதாஸ ராஜபக்ஷ போன்றோர் நேரில் சென்று பார்த்து, தீர்வுக்கான பரிந்துரைகளோடு வருவார்கள் என அறிவிக்கப்பட்டது. முதலாம் திகதி அந்த இடங்களுக்கு அவர்கள் செல்வார்கள் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

விடயம் என்னவாயிற்று என்று தேடிப் பார்த்தேன். அமைச்சர்கள் இருவரினதும் விஜயம் தள்ளிப் போடப்பட்டு இருப்பதாகக் கூறப்பட்டது. ஏனென்று விசாரித்தேன். அப்போதுதான் தன் கைப்புண்ணைத் தானே பெரிதாக்கும் குரங்கின் கதை எனக்கு கூறப்பட்டது.

'இந்த இரு அமைச்சர்களும் அந்தப் பகுதிகளுக்கு விஜயம் செய்வார்களாயின், அச்சமயத்தில் நாங்களும் அவர்களுடன் அவ்விடத்திற்குச் செல்ல வேண்டும்' என்று தமிழ் அரசியல் பிரமுகர் ஒருவர் ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்டு, வலியுறுத்தி இருக்கிறார். சம்பந்தப்பட்ட இரண்டு அமைச்சர்களுக்கும் (டக்ளஸுக்கும், விஜேதாஸ ராஜபக்ஷவுக்கும்) இது குறித்து ஜனாதிபதி செயலகம் தகவல் கொடுத்திருக்கின்றது.

'கூட்டிச்செல்வதானால் தமிழர் தரப்பு மக்கள் பிரதிகளை மட்டும் கூட்டிச் செல்ல முடியாது அல்லவா? பௌத்த, சிங்களத் தரப்பின் பிரதிநிதிகளையும் சேர்த்து அல்லவா கூட்டிச் செல்ல வேண்டும்? முறுகல் நிலையில் முரண்பட்டு நிற்கும் தரப்புகளையும் கூட்டிச் சென்று தீர்வு காண முயல்வது என்பது சாத்தியமா எனத் தெரியவில்லை.

சம்பந்தப்பட்ட அமைச்சர் குழுவை சுயாதீனமாக செயல்படவிட்டு விட்டுப் புதிய பரிந்துரை வந்தபின், அதிலிருந்து சாதக, பாதகங்களை ஆராய்ந்து முன்னேற முற்பட்டிருக்கலாம்.

***

'மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் தலைவரானார் இளஞ்செழியன்' என்ற எங்களது நேற்றைய செய்தியைப் பார்த்துவிட்டு கொழும்பு ஹல்ஸ்டோர்ப்பின் மூத்த நண்பர் ஒருவர் தொடர்பு கொண்டார். இரண்டு விடயங்களைச் சுட்டி காட்டினார். அவை வாசகர்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டியவை என்று நினைத்தமையினால் அவற்றைப் பகிர்கிறேன். அவை வருமாறு:-

1. மேற்படி தலைவர் பதவிக்குரியவரைத் தேர்தல் மூலமோ அல்லது அங்கத்தவர்களின் விருப்புக்கு அமையவோ தேர்வு செய்வதில்லை. மாறாக, அதிக சிரேஷ்ட முன்னுரிமை நிலையில் இருக்கும் most senior judge இப்பதிக்கு அறிவிக்கப்படுவார். இப்போது மேல் நீதிமன்ற நீதிபதிகளில் சிரேஷ்ட நிலையில் இருப்பவர் இளஞ்செழியனாக இருக்கும். அதனால்அது அவருக்குவழங்கப்பட்டிருக்கும்.

2. இந்தப் பதவிக்குத் தெரியப்படும் முதல் தமிழர் இளஞ்செழியன் அல்லர். நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனும் நீதிபதியாக இருந்த போது இந்தத் தலைமைப் பொறுப்பை வகித்துள்ளார். வேறு யாரேனும் தமிழர்களும் இருந்தார்களோ தெரியவில்லை. - இப்படி அந்த நண்பர் தெரிவித்திருந்தார்.

சரி. மேல் நீதிமன்ற நீதிபதிகளில் இன்று most senior இளஞ்செழியன் என்றால், அதற்கு அடுத்த உயர் நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பதவிகளில் ஒரு வெற்றிடம் ஏற்படும் போது அந்த நிலைக்கு இளஞ்செழியன் பதவி உயர்வு பெறுவாரா? நீதிச் சேவை ஆணைக்குழு அதற்கு சார்பாக பரிந்துரைக்குமா? தெரியவில்லை.

***

நேற்று கொழும்பில் எதிரணிகள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு ஆதரவு தந்த கட்சிகளின் பட்டியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரும் இருந்தது. ஆனால் கூட்டமைப்பு பிரமுகர் எவரினதும் தலைக் கறுப்பைக் கூட அங்கு காணவில்லை.

வழக்கமாக அறகலயக்காரர்களுடன் சொந்தம் கொண்டாடும் சுமந்திரன், சாணக்கியன் இருவரும் நாட்டில் இல்லை.

சாணக்கியன் நாடாளுமன்றக் குழு ஒன்றுடன் மேற்கு நாடுகள் பக்கம் உலாச் சென்றுள்ளார்.

சுமந்திரன் குடும்பத்துடன் நேபாளம் பக்கம் போயிருக்கின்றார் என்று ஒரு தகவல். இவ்வளவு அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் குடும்பத்துடன் ஒரு வாரம் வெளிநாட்டுக்குச் சென்று வர நேர ஒதுக்க முடிந்தமை அவருக்கு கிடைத்த பரிசுதான் போலும்.

**- மின்னல் -**

## பொலிஸ் தடுத்ததும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சமயம் ஊர்வலத்தில் கூடி இருந்தோர் கூவடித்து, கூக்குரல் எழுப்பி அவர்களை அகௌரவப்படுத்தியமையும் இடம்பெற்றது. அதனால், ஆர்ப்பாட்டக்காரர்களின் அதிருப்தி மற்றும் கேலிக்கு மத்தியில் அந்த இடத்தை விட்டு அகலும் நிலை சஜித் உட்பட்ட எதிரணித் தலைவர்களுக்கு நேர்ந்தது.

அரசாங்கத்தின் அடக்கு முறை போக்கை உடனடியாக நிறுத்தக் கோரியும், பயங்கரவாதத் தடை சட்டத்தை ரத்து செய்ய வலியுறுத்தியும், இந்த ஆர்ப்பாட்டம் நேற்று இடம்பெற்ற நிலையில், பொலிஸாரால் அதற்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டது.

எதிர்ப்புப் பேரணி மருதானையில் ஆரம்பமான நிலையில் கோட்டை ரயில் நிலையம் நோக்கிச் செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் பொலிஸார் புறக்கோட்டை - மிதக்கும் சந்தையை ஒட்டியுள்ள சந்தைப் பகுதியுடன் பிரதான வீதியை நடைப் பாதையுடன் சேர்ந்து முற்றாக மூடி இடையூறு ஏற்படுத்தினர்.

மருதானை எல்பிஸ்டன் திரையரங்கம் அருகே இருந்து பிற்பகல் 3.30 மணிக்கு ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமானது.

'அடக்குமுறையை நிறுத்து; பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு' எனும் பிரதான தொனிப் பொருள் அடங்கிய பதாகையின் பின்னே ஆர்ப்பாட்டக்காரர்கள் கோட்டை நோக்கி தொழில் நுட்ப சந்தி ஊடாக முன்னேறினர்.

இந்த பேரணியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா உள்ளிட்ட அக்கட்சியின் முக்கியஸ்தர்கள், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர உள்ளிட்ட அக்கட்சி முக்கியஸ்தர்கள், சந்திம வீரக்கொடி உள்ளிட்ட அரசியல் தரப்பினர் என பல தரப்பினரும் பங்கேற்றிருந்தனர்.

அரசியல் தலைமைகளுக்கு மேலதிகமாக, நூற்றுக்கணக்கான தொழிற்சங்கத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டர்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, முன்னிலை சோசலிசக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, 43 ஆம் படையணி, சுதந்திர மக்கள் சபை உள்ளிட்ட சுமார் 20 அரசியல் கட்சிகளும் சுமார் 150 தொழிற்சங்கங்களும் அரசாங்கத்தின் இந்த பேரணிக்கு ஆதரவு தெரிவித்த நிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

அரசியல் தலைவர்கள், தொழிற் சங்க தலைவர்கள் பிரதான பதாதையை ஏந்தி முன்னோக்கி பயணித்த நிலையில் அதன் பின்னே ஆர்ப்பாட்டக் காரர்கள் பயணித்தனர்.

இந் நிலையில், ஆயிரக்கணக்கான பொலிஸாரை கொண்டு புறக்கோட்டை மிதக்கும் சந்தைக்கு அருகே உள்ள சந்தைப் பகுதியில் பிரதான பாதையை மூடி, நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகைப் பிரயோகம் செய்ய பொலிசார் தயாராக இருந்த நிலையில் ஆர்ப்பாட்டத்தை மறித்து இடையூறு விளைவித்தனர்.

பொலிஸ் மனிதச் சங்கிலி வேலியை கண்டு முன்னே சென்ற அரசியல்வாதிகள் உள்ளிட்டோர் அவ்விடத்தில் தரித்து நின்ற நிலையில், பின்னால் வந்த ஆர்ப்பாட்டக் காரர்கள், பொலிஸாரை மீறி கோட்டை நோக்கி செல்லுமாறு அரசியல்வாதிகளை வலியுறுத்தினர்.

இதனால் அவ்விடத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. பின்னர் அங்கு வைத்து அரசியல்வாதிகள் ஆர்ப்பாட்டத்தில் இருந்தோரை நோக்கி உரையாற்ற முனைந்த போதும், திட்டமிட்ட படி முன்னோக்கி செல்லாது அவ்விடத்தில் நின்றதால் அதற்கு அங்கிருந்த ஆர்ப்பாட்டக் காரர்கள் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இதனால் பின்னர் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் அங்கிருந்து எதிர்ப்புக்கு மத்தியில் வெளியேற வேண்டி ஏற்பட்டது.

எனினும் ஹிருணிகா பிரேமச்சந்திர, முஜிபுர் ரஹ்மான் போன்ற அரசியல் பிரமுகர்கள், இறுதிவரை ஆர்ப்பாட்டக் காரர்களுடன் அவ்விடத்திலிருந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதனைவிட, முன்னிலை சோலிக் கட்சியினர், தொழிற்சங்க பிரதி நிதிகளும், சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் அவ்விடத்தில் மாலை 6.10 மணி வரை நின்றனர்.

ஒரு கட்டத்தில் கலக தடுப்பு பொலிசார் ஆர்ப்பாட்டக் காரர்களை பின் நோக்கி நகர்த்த முற்பட்டாலும் அது சிறிது தூரத்துக்கு அப்பால் சாத்தியமற்று போனது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள், அரசியல் தலைமைகளுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியமையுடன், ஜனாதிபதி ரணிலுக்கு எதிராகவும், அடக்குமுறைக்கு எதிராகவும் தொடர்ச்சியாக சுமார் இரண்டரை மணி நேரம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அதன் பின்னர் அமைதியாக கலைந்து சென்றனர்.

பொலிஸார் எந்த அறிவித்தலும் இன்றி, நீதிமன்ற உத்தரவும் இன்றி பிரதான வீதியை மறித்ததால், கொழும்பு எங்கும் இன்று மாலை கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது. இதனால் அலுவலக வேலைகளை முடித்துக்கொண்டு வீடுஎல்ல முனைந்தவர்கள், ஏனைய பயணங்களை முன்னெடுப்போர் என அனைவரும் கடுமையாக பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சிக்கு மனோ கணேசன் எம்.பி., ரவூப் ஹக்கீம் எம்.பி. ஆகியோர் வந்திருந்தனர். எனினும் ஆர்ப்பாட்ட ஒழுங்கு பிடிக்காதமையால் அவர்கள் நேரத்துடன் அங்கிருந்து வெளியேறினர்.

டலஸ் அழகப்பெருமா அணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதுவும் வரவில்லை. ரிசாத் பதியுதீன் தலை காட்ட வில்லை. சு.கவிலும் ஒரு சிறிய அணியே செயலாளர் தயா ஜயசேகரா தலைமையில் பங்கு கொண்டது. சம்பிக்க ரணவக்கவும் தனித்து வந்து கலந்து கொண்டார்.

## பொலிஸாரின் தடையைக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிணைந்து நேற்று புதன்கிழமை கொழும்பில் பாரிய போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இதற்கு பொலிஸார் அனுமதி வழங்க மறுத்திருந்த நிலையில், அதனைக் கண்டித்து தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது. அப்பதிவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தொழிற்சங்கங்கள், மாணவர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து இன்றைய தினம் நடத்துவதற்குத் திட்டமிட்டிருக்கும் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி வழங்க பொலிஸார் மறுத்துள்ளமை தீவிர கரிசனையைத் தோற்றுவித்துள்ளது.

போராட்டக்காரர்கள் அமைதியான முறையில் ஒன்றுகூடுதல் போன்ற தமது அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதற்கு அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை.

இப்போராட்டத்திற்கு அனுமதி வழங்க மறுப்பதற்கான காரணமாக பொலிஸாரால் கூறப்பட்டுள்ள விடயங்கள், அமைதிப் போராட்டங்கள் மீது மட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அவசியமான சர்வதேச சட்ட நியமங்களைப் பூர்த்திசெய்யவில்லை. குறிப்பாக இப்போராட்டங்களால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ளமுடியாது.

(11ஆம் பக்கம் பார்க்க)



# இன்னும் நான்கு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

## அமெரிக்க லொத்தர் விசா

நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

0768226244
0768226240

நீங்கள் தவறினால் இன்னொருவர் இந்த வாய்ப்பை பெறுவர்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சஜித் படித்த பாடம்

'உலக நீதி' ஒரு தமிழ் நீதி நூல். உலகநாதன் இயற்றியது. அதன் விருத்தப்பாக்களில் ஒன்று 'சேராத இடம் தனிலே சேர வேண்டாம்' என்ற அடியோடு ஆரம்பிக்கின்றது.

அரசு எதிர்ப்பு போராட்டம் என்ற பெயரில், சேரக் கூடாத அணியுடன் சேர்ந்ததன் அதிருப்தியை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸாவும் அவரின் சகாக்களும் நேற்று பட்டுணந்திருப்பர் என்று நம்பலாம்.

கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பும் போராட்டத்தை முன்னெடுத்த'அறகலய' தரப்பினரின் போக்கும், செயல், சிந்தனையும், நடவடிக்கைகளும் ஐக்கிய மக்கள் சக்தி போன்ற ஜனநாயக அரசியல் கட்சிகளின்து செயல், சிந்தனைப் போக்கும் வேறுவேறனவை.

'கோட்டா கோ ஹோம்' போராட்டம் ஆரம்பத்தில் அமைதி முறையாகத் தொடர்ந்தாலும், காலப்போக்கில் அதன் நடவடிக்கைகள், செயற்பாடுகள் விபரீதமாக அமைந்ததைக் கண்டோம். முன்னிலை சோசலிஸ்ட் கட்சி போன்றவற்றின் போராட்ட நடவடிக்கைகளும், மாற்று அரசை அமைக்கும் தகுதி நிலையோடு அரசியல் செய்யும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அது போன்ற பிற கட்சிகளினது போராட்ட செயன்முறைகளும் வேறுவேறானவை.

முதல் தரப்பாரின் போராட்ட முறைமைக்குள் சம்பந்தப்படுவதற்கு சஜித்தும் அவரது சகாக்களும் முடிவெடுத்து, நேற்றைய போராட்டத்தில் ஒன்றிணைந்தமை பொருத்தமற்ற இணக்கப்பாடாகும்.

அஹிம்சைப் போராட்டம், வன்முறையற்ற அணுகுமுறை என்று கூறிவிட்டு, வழிமறித்து நிறுத்தப்பட்டிருந்த பொலிஸாரின் தடைகளைத் தகர்த்து, உடைத்து முன்னேறும் வன்முறை மார்க்கமே அறகலய கற்றுத் தந்த பாடம்.

அந்தப் போராட்ட முறைமைக்கு இசைந்தே வராத, வரமுடியாத, ஐக்கிய மக்கள் சக்தி போன்றவை முன்னைய தரப்புகளுடன் இத்தகைய போராட்டம் ஒன்றுக்கு இணங்க முற்பட்டமையே முதலில் முட்டாள்தனமான முடிவாகும்.

பல நூற்றுக் கணக்கில் பொலிஸாரை நிறுத்தி, பொலிஸே மனிதக் கேடயத்தை வீதி மறிப்பாக நேற்றுப் போட்டிருந்த போது, பழைய அறகலயக்காரர்கள் பொலிஸ் வேலியைத் தகர்த்தெறிந்து, உடைத்துப் பிளந்து, முன்னேற வேண்டும் என்ற எதிர்பார்ப்பை வெளியிட்டனர்.

அப்போதுதான் களேபரம் வெடிக்கும். புகைக் குண்டுகள் வீசப்படும். நீர்த்தாரை பீய்ச்சி அடிக்கப்படும். வன்முறை கட்டவிழ்ந்து, குழப்பம் ஏற்படும் என்பவை எல்லாம் அற்ச்கலய பாணி எதிர்பார்ப்பாகும்.

இது சரிப்பட்டு வராது என்பதால் – அந்த முறைமை பொருந்தி வராது என்பதால் – போராட்டத்தின் ஒரு கட்டத்தில் அங்கிருந்து வெளியேறினர் சஜித் உட்பட அரசியல் தலைவர்கள். அச்சமயங்களில் அவர்களுக்கு எதிராகக் கூக்குரல் எழுப்பப்பட்டன.

அரச எதிர்ப்புப் போராட்டத்திற்கு இந்தக் கூட்டில் இறங்க வேண்டாம் என சஜித் தரப்புக்கு பலமுனைகளில் இருந்து முன்னாலோசனைகள் கொடுக்கப்பட்டிருந்தன. அவற்றை மீறி ஒன்றிணைந்தமையின் பாடத்தை சஜித் கட்டாயம் படித்திருப்பார் என்பது நிச்சயம்.

## ஒரு தொகுதி டீசல் சீனாவிலிருந்து நாட்டுக்கு!

### அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு



சீனாவில் இருந்து ஒரு தொகுதி டீசல் இம்மாத இறுதிக்குள் நாட்டுக்கு வரவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அபுதாபியில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டபோதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் ஏதேனும் உதவிகள் கிடைத்துள்ளனவா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை, பத்து மாதங்கள் மிகவும் நெருக்கடியான காலத்தை கழித்ததாகவும் அதன் காரணமாகவே எரிசக்தி துறையில் நெருக்கடி ஏற்பட்டதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதனூடாக வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன எனக் குறிப்பிட்ட அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தனியார் விநியோகஸ்தர்களுக்கு இந்தத் துறையில் பிரவேசிப்பதற்கான சட்ட மற்றும் கொள்கைக் கட்டமைப்புகள் திருத்தியமைக்கப்பட்டன எனவும் தெரிவித்தார்.

மேலும் 2030ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் 70 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## இலங்கையில் வீடுகளை அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை வேலைத்திட்டத்தால் 43,700 அமெரிக்க டொலர் இலாபமாம்

இலங்கையில் உள்ள வீடுகளை அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு 3 வீடுகளை விற்பனை செய்து 43 ஆயிரத்து 700 அமெரிக்க டொலர்களை அரசாங்கம் ஈட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பன்னிபிட்டிய – வியாட்புர, கொட்டாவ மற்றும் மாலம்பே பிரதேசங்களில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீட்டுத் தொகுதிகளில் இந்த வீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மேலும் 10 வீடுகளை வாங்க வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம், பிரித்தானியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கையர்களால் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

## 24 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் காலியில் உணவு நெருக்கடியில் உள்ளனர்

காலி மாவட்டத்தில் 24 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் கடுமையான உணவு நெருக்கடியில் உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளன என மாவட்ட செயலாளர் சாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்த அவர், அந்தக் குடும்பங்களில் சுமார் 800 ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

மாதம்பகம, ஹிக்கடுவை மற்றும் பல பிரதேச செயலகங்களில் உள்ள குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆபத்தில் உள்ள குடும்பங்களில் குழந்தைகளுக்கு மேலதிகமாக கர்ப்பிணித் தாய்மார்களும் இருக்கின்றனர் எனக் காலி மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலையீட்டின் மூலம் உரிய இடர்பாடுகள் உள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு உள்ளிட்ட உணவுப் பொருள்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரது ஆதரவும் தேவை!

### வஜிர அபேவர்த்தன அழைப்பு

இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு அனைவரது ஆதரவும் அவசியம் என்பதால் கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என வஜிர அபேவர்தன அழைப்பு விடுத்தார்.

சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே வஜிர அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரத்தின் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாகத் தமது நோக்கங்களுக்காகப் பல்வேறு வகையில் செயற்பட்டமையாலேயே நாடு அராஜக நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. – என்றார்.



சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகள் இந்த அடிப்படை உரிமைகளுக்கு சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளமையால் அந்த நாடுகள் வளர்ச்சியடைந்துள்ளன எனவும் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.



# தம்மைச் சார்ந்தோர் சுயாதீன ஆணைக்குழுக்களில் இடம்பெற விரும்பும் சர்வதேச அமைப்புக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும்!




சில அரச சார்பற்ற நிறுவனங்களும், சர்வதேச அமைப்புக்களும், குழப்பம் விளைவிக்க முற்படும் தரப்புக்களும் தம்மைச்சார்ந்த நபர்கள் சுயாதீன ஆணைக் குழுக்களில் அங்கம் வகிக்கவேண்டும் என்று நினைக்கின்றன.

ஆனால் எந்தவொரு தரப்பினருக்கும் தேவையான நபர்களை ஆணைக்குழுக்களுக்கு நியமிக்கமுடியாது. மாறாக, நாட்டுக்குத் தேவையான நபர்களையே நியமிக்கமுடியும் என்று தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த அமைச்சர் மனுஷ நாணயக்கார, அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ள அரசமைப்பிற்கான 21 ஆவது திருத்தம் தொடர்பில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இந்தத் திருத்தத்தின் பிரகாரம் இடம்பெறக்கூடிய சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் நியமனத்தின் நம்பகத்தன்மை தொடர்பில் கேள்வி எழுப்பப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ள அவர், 'சில அரச சார்பற்ற நிறுவனங்களும், சர்வதேச அமைப்புக்களும், சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாட்டில் குழப்பம் விளைவிக்க முயற்சிக்கும் தரப்புக்களும் தம்மைச்சார்ந்த பிரதிநிதிகள் அந்தக் குழுக்களில் அங்கம்வகிக்கவேண்டும் என்று நினைக்கின்றனர்' என்று தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இங்கு (சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு) எந்தவொரு தரப்பினருக்கும் தேவையான நபர்களை நியமிக்கமுடியாது என்றும், மாறாக நாட்டுக்குத் தேவையான நபர்களையே நியமிக்கமுடியும் என்றும் குறிப்பிட்டுள்ள அமைச்சர் மனுஷ நாணயக்கார, அரசமைப்பிற்கான 21 ஆவது திருத்தத்தின்படி சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பெயர் பரிந்துரை நியாயமான முறையில் முன்னெடுக்கப்படும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# எச்.ஐ.வி. தொற்று தொடர்பில் விசாரணைகளை நடத்துங்கள்!

## சுகாதார தொழில் வல்லுநர் அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 03

பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலானோர் உட்பட இளம் பிக்குகள் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகி உள்ளனர் என தேசிய பாலியல் நோய் தடுப்பு பிரிவை மூலமாக கொண்டு வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் விசாரணை நடத்துமாறு சுகாதார அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளதாக சுகாதார தொழில் வல்லுநர் அமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என வெளியாகியுள்ள செய்தி ஒட்டுமொத்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு உளவியல் ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், அவர்களின் திருமண வாழ்விற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான நபரின் தனிப்பட்ட தகவல்களை எக்காரணிகளுக்காகவும் மூன்றாவது தரப்பினர் அறிந்துக் கொள்ள கூடாது, எச்.ஐ.வி. பரிசோதனைக்கு வரும் நபர்கள் அசௌகரியங்களுக்குள்ளாக்கப்பட கூடாது என்பது தேசிய பாலியல் நோய் தடுப்பு பிரிவின் பிரதான கொள்ளையாகும்.

எச்.ஐ.வி. தொற்று தொடர்பில் அண்மையில் வெளியாகியுள்ள செய்தி தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலானோர் உட்பட இளம் பிக்குகள் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என தேசிய பாலியல் நோய் தடுப்பு பிரிவை மூலமாக கொண்டு செய்தி வெளியாகியுள்ளது.

எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான நபர் தொடர்பான விபரங்களை வெளியிட கூடாது என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தற்போது குழு அடிப்படையிலான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மசாஜ் மையங்களுக்கு செல்பவர்களில் பெரும்பாலானோர் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகிறது.

தேசிய பாலியல் நோய் தடுப்பு பிரிவை மூலமாக கொண்டு வெளியான செய்தியால் பல்கலைக்கழக மாணவர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழக மாணவர்களின் திருமண வாழ்விற்கும் இந்த செய்தி என்றாவது பாதிப்பை ஏற்படுத்தும். இந்த செய்தி தொடர்பில் விசாரணை நடத்துமாறு சுகாதாரத்துறை அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளோம் என்றார்.




# ஜே.வி.பி. இன்றும் வன்முறைகளை 88 - 89 போன்று கட்டவிழ்க்கின்றது!




மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்ட 88 – 89 காலப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணி எவ்வாறு நடந்துகொண்டதோ அதேபோன்றுதான் தற்போதும் நடந்துகொள்வதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் –

ஜே.வி.பி தமது தடிகள், வாள்கள், கத்திகள் மற்றும் தீப்பந்தங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக தொழிலாளர்களுடன் இணைந்து கொண்டதாகத் தாம் நினைத்ததாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் ஜே.வி.பியும் இணைந்துகொள்வதற்கான கொள்கைத் தீர்மானத்துக்கு வரும் என்று தாங்கள் நினைத்ததாகவும் ஆனால் அது அப்படித் தெரியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஏனெனில், மே 9 ஆம் திகதி அவர்கள் நடந்துகொண்ட விதம் 88 மற்றும் 89 காலகட்டங்களின் நடத்தையை காட்டுகிறது என்றும் நாமல் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், தற்போதைய அரசாங்கம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாமல் –

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காகத் தற்போதைய ஜனாதிபதி குறிப்பிட்ட நடைமுறையை நடைமுறைப்படுத்தி வருகிறார். எனவே, நாங்கள் அவருக்கு சிறந்த ஆதரவை வழங்குவோம்.

நாங்கள் இருவரும் தனித்தனி அரசியல் கட்சிகள், அரசியல் கொள்கைகளை கருத்திற்கொள்ளும்போது நாங்கள் தனித்தனியாக நிற்கிறோம்.

ஆனால் நாட்டில் உள்ள மக்களின் தேவைகளுக்காக ஜனாதிபதியும் நாமும் ஒரு நடுத்தர புள்ளிக்கு கொள்கைகளை கொண்டுவர முயற்சிக்கிறோம்.

எந்த ஒரு கொள்கை முடிவும் எடுக்க முடியாவிட்டால், அவருடன் பேசி அதை சரிசெய்வோம். – என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இராஜாங்க அமைச்சர் சனத்தின் வாகனம்மோதி ஒருவர் சாவு!

புத்தளத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிராந்தவின் வாகனம் மோதியதில் காயமடைந்த நபர் கடந்த ஞாயிற்றுக் கிழமை உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர் கடந்த ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி இராஜாங்க அமைச்சரின் வாகனம்மோதுண்டு காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் – குருநாகல் வீதியில் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்த ஒருவர் மீது இராஜாங்க அமைச்சரின் வாகனம் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் போது பலத்த காயமடைந்த நபர் முதலில் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அவரது உடல்நிலை மோசமடைந்ததால் குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இருப்பினும் தற்போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். முள்ளிபுரம் மீனவ கிராமத்தைச் சேர்ந்த 48 வயதுடைய நபரே 15 நாளகளின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.



இந்நிலையில் இராஜாங்க அமைச்சரின் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் மரணத்தையடுத்து வாகன சாரதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நாணய நிதியம் கணித்ததை விட அதிகமாக பொருளாதார வளர்ச்சியை இந்தியா எட்டும்

## தலைமைப் பொருளாதார ஆலோசகர் எதிர்வு கூறல்



இந்தியாவின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி.ஆனந்த நாகேஸ்வரன், அடுத்த ஆண்டு சர்வதேச நாணய நிதியம் கணித்ததை விட சிறந்த பொருளாதார வளர்ச்சியை இந்தியா அடைந்து வருவதாகக் கூறினார்.

மேம்பட்ட மூலதன உருவாக்கம், அதிக வளர்ச்சிக்கு உதவும் என்றார். சர்வதேச நாணய நிதியம் இந்தியாவிற்கு இந்த ஆண்டு 6.8 சதவிகிதம் மற்றும் அடுத்த ஆண்டு 6.1 சதவிகிதம் உண்மையான வளர்ச்சியைக் கணித்துள்ளது.

உண்மையில், வரவிருக்கும் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதங்கள் இந்த எண்களை விட சற்று அதிகமாகவும், சற்று சிறப்பாகவும் இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் ஒரு தசாப்த ஆள் குறைப்புக்குப் பிறகு இந்தியாவின் மூலதன உருவாக்கம் சுழற்சி சிறப்பாகச் செயல்படும் வாய்ப்பு இருப்பதாக நான் நினைக்கிறேன் என்று அவர் கூறினார்.

இந்தியாவின் பொது டிஜிற்றல் உள்கட்டமைப்பு பெரும்பாலும் ஓர் ஊடுருவல் புள்ளியைத் தாண்டியிருக்கலாம். மேலும் அது பொருளாதாரத்தை முறைப்படுத்துவதற்கும், அதனால் அதிக வளர்ச்சிக்கும் பங்களிக்கும் என்றும் அவர் கூறினார்.

எனவே, 6 சதவீத அடிப்படை எண்களுடன் 0.5 – 0.8 சதவீதம் கூடுதலாக இருக்கலாம் என்று அவர் கூறினார்.

நிதிக் கொள்கையும் பணவியல் கொள்கையும் பொதுவாக ஒத்திசைக்கப்பட்டு ஒன்றுக்கொன்று சமநிலையில் இருக்கும் என்றும் அவர் குறிப்புட்டார்.

அதிக கடன் – மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில், நிலைத்தன்மை கவலைக்குரியது அல்ல, அது சொத்து பணமாக்குதலுடன் குறையக்கூடும் என்றார்.

இந்தியா தனது கடனைக் குறைக்க சொத்து பணமாக்குதலைப் பயன்படுத்தலாம். மேலும் இது கடன் மதிப்பீட்டை மேம்படுத்த உதவும், இது நாங்கள் வழங்கக்கூடிய சிறந்த நிதி ஊக்கமாக இருக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

**(மூலம்: 'த எக்கனமிக் ரைம்ஸ்')**

# குறைந்த செலவில் பொருள்கள் உற்பத்தி, தயாரிப்புக்கு உலகின் வாய்ப்பான பொருளாதார மையமாக இந்தியா!

## இன்.:.போசிஸின் இணை நிறுவனர் கிரிஸ் கோபாலகிருஷ்ணன் கருத்து

உலகின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடான இந்தியா இன்னும் இரண்டு தசாப்தங்களுக்கு குறைந்த செலவுடனான பொருளாதாரமாக நீடிக்கும் என்பதால், பல ஆண்டுகளாக பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மலிவான இலக்கை இந்தியா தொடர்ந்து வழங்கும் என்று இன்ஃபோசிஸின் இணை நிறுவனர் கிரிஸ் கோபாலகிருஷ்ணன் கூறினார்.

அடுத்த 10 – 20 ஆண்டுகளுக்கு இந்தியா குறைந்த செலவிலான பொருளாதாரமாகத் தொடரும். அதேசமயம் வளர்ச்சியில் நமக்கு மேலே உள்ள நாடுகள் அனைத்தும் அதிக வருமானம் ஈட்டும் நாடுகளாகும். இன்னும் வரும் பல வருடங்களுக்கு பலருக்கு இந்தியாவில் தயாரிப்புகளை வடிவமைக்கவும், உருவமைக்கவும், உற்பத்தி செய்யவும் மலிவாக இருக்கும். என்று பட்டமளிப்பு விழா ஒன்றில் கோபாலகிருஷ்ணன் கூறினார்.

தனிநபர் வருமானம் குறைந்தபட்சம் 6,000 அமெரிக்க டொலர் முதல் 7,000 அமெரிக்க டொலர் வரை கொண்ட, நடுத்தர வருமானம் மிக்க நாடாக மாறுவதன் மூலம், சீனா இன்று இருக்கும் இடத்தை இந்தியா அடைய இன்னும் மூன்று தசாப்தங்கள் ஆகும் என்று அவர் மேலும் கூறினார்.

தொழிற்சாலைத் தளமாகக் கருதப்படும் சீனாவிலிருந்து உற்பத்தியில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், கொரோனா வைரஸ் தொற்றுநோய் தோன்றியதன் காரணமாக, இங்கு உற்பத்திக்காக வெளிநாட்டு நிறுவனங்களை ஈர்க்கும் நடவடிக்கைகளை இந்தியா தீவிரப்படுத்தியுள்ளது. உள்நாட்டு உற்பத்தியை



அதிகரிக்கவும், உலகளாவிய ஏற்றுமதியை அதிகரிக்கவும், பிரபலமான உற்பத்தி – இணைக்கப்பட்ட ஊக்கத் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களை புதுடில்லி



தன்பங்குக்கு உருவாக்கியுள்ளது.

தொழிலாளர் மத்தியஸ்தம் – குறிப்பாக சேவைகள் விடயத்தில் – முன்னணியில் இருக்கின்றமை நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக உள்ளது.

மேலும், இந்தியாவும் அதன் 1.4 பில்லியன் நுகர்வோர் காரணமாக மிகப்பெரிய சந்தைகளில் ஒன்றாகும். இது உலகின் அனைத்து முக்கிய நிறுவனங்களையும் ஈர்க்க உதவுகிறது என்று இத்துறையில் மூத்தவரான கோபாலகிருஷ்ணன் கூறினார்.

அடுத்த மூன்று தசாப்தங்களில், 10 முதல் 15 டிரில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நிகர உள்ளூர் உற்பத்தியுடன் உலகின் இரண்டாவது அல்லது மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா மாறும். மேலும் நாடு அடுத்த 30 ஆண்டுகளில் ஒரு குடும்பம் வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், வளர்ப்பதற்கும் சிறந்த இடமாக இருக்கும். என்றார் கோபாலகிருஷ்ணன்.

எவ்வாறாயினும், நாடு பிரச்சினைகளை சமாளித்து, நீதி, சமத்துவம் மற்றும் நியாயமாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று கோபாலகிருஷ்ணன் கூறினார்.

முழு உலகமும் இதே பிரச்சினைகளால் பாதிக்கப்



பட்டுள்ளது. அவற்றை நிவர்த்தி செய்வதில் இந்தியா முன்னணியில் இருக்க முடியும் என்றார்.

எங்களிடம் அறிவு, தொழில்நுட்பத்திற்கான அணுகல் மற்றும் வளங்கள் உள்ளன. சிறந்த இந்தியா மற்றும் சிறந்த உலகத்தை உருவாக்க நாம் கடினமாக உழைக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நாட்டை வளப்படுத்தும் ஜே.ஆரின் நோக்கை முன்னோக்கி கொண்டுசெல்லக் கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில்!

## பெல்பொல விபஸ்ஸி தேரர் புகழாரம்

மறைந்த தலைவர் ஜே.ஆர். ஜயவர்தன தனது இளமைக் காலத்திலேயே அரச தலைவராக நாட்டைப் பொறுப்பேற்றிருந்தால் இலங்கை இன்று வளமான நாடாகியிருக்குமென்றும் அவருக்கு அடுத்தபடியாக அவரை ஒத்த அரச தலைவராக இருப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே முடியுமென்றும் கோட்டே விகாரை பீடத்தின் பதிவாளர் வணக்கத்துக்குரிய பெல்பொல விபஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவின் இரத்த உறவினரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அதற்கான ஆளுமை இருப்பதாக சுட்டிக்காட்டிய தேரர், இந்தத் தலைவர்கள் அரசியல் மூலம் எதையும் சம்பாதிக்காமல், தமது சொத்துக்களைக் கூட மக்களுக்காகத் தியாகம் செய்துள்ளார்கள் என்றும் கூறினார்.

சரியான தலைமைக்கு அன்று அங்கீகாரம் கிடைக்காததாலேயே இன்று நாடு இவ்வாறானதொரு நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர்.ஜயவர்தனவின் 26 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கொழும்பு 07, ஜே.ஆர்.ஜயவர்தன மையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வில் விசேட அனுசாசன உரை நிகழ்த்தியபோதே வணக்கத்துக்குரிய பெல்பொல விபஸ்ஸி தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

இதில் கலந்துகொண்ட ஜனாதிபதி மகா சங்கத்தினருக்கு அன்னதானம் வழங்கினார்.மனிதர்கள் உயிருடன் இருக்கும் போது அவர்களின் மதிப்பை பெரும்பாலான மக்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். புத்தரைப் போலவே மற்ற முனிவர்களும் உயிருடன் இருந்தபோது வரும் அவர்களின் மதிப்பை உணரவில்லை. அதே போன்று ஜே. ஆர்.ஜயவர்தன உயிருடன் இருந்த காலத்தில் அவரின் பெறுமதி புரியவில்லை. இலங்கையில் உள்ள ஒவ்வொரு அரச தலைவர்களின் சிலைகளும் உருவாக்கப்பட்டன. ஆனால் ஜே. ஆர்.ஜயவர்த்தனவின் சிலை செய்யப்படவில்லை.

இன்று இருபத்தாறு வருடங்கள் கடந்துள்ள நிலையில் ஜனாதிபதி உட்பட அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் ஒன்றிணைந்து இந்த அறச்செயலை மேற்கொள்வது இந்தக் குடும்பத்தின் நன்றியை காட்டுகிறது. – என்றார்.

திம்பிரிகஸ்யாயே அசோகாராமாதிபதி வண. கெடஹெத்தே சோபித தேரர் செய்த விசேட உரையின்போது –

இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் சிறப்புகளை நினைவுகூரும் நிகழ்வு ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகிறது. ஜயவர்தன அவர்கள் ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, அரச தலைவராக இருந்தாலும் சரி ஒரே மாதிரியான மனிதாபிமானம் நிரம்பிய தலைவராகச் செயல்பட்டார்.

உலக அமைதி மாநாட்டில் 'நஹி வெரேன வெரானி' என்ற புத்தரின் வார்த்தைகளால் உலகையே அமைதிப்படுத்தினார். அதனால்தான் ஜயவர்தனபுர வைத்தியசாலை, தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களை உருவாக்க இலங்கைக்கு உதவி கிடைத்தது.

இவை கடன்கள் அல்ல. அரசியல் மூலம் பெறப்பட்டவையும் அல்ல. இவை அமைதியைப் பரப்பியதன் மூலமும், உலகை ஒருங்கிணைத்ததன் மூலமும் பெறப்பட்ட உதவிகள் ஆகும்.

புத்தர் உலகுக்கு அறிவித்த அவரது



வார்த்தைகளின் மதிப்பை இன்று நம் நாடு உணர்கிறது. இன்று நம் நாடு பெரும் நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இவ்வேளையில், அனைவரும் வெறுப்பு இன்றி ஒன்றிணைந்து நெருக்கடியில் இருந்து வெளிவர உழைக்க வேண்டும். அதனால்தான் ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் மதிப்பு அன்று இருந்ததை விட இன்று அதிகமாக உணரப்படுகிறது. – என்றார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, யாதாமினி குணவர்தன உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# விலை குறையும் என்ற எதிர்பார்ப்பே எரிவாயு தட்டுப்பாட்டுக்கு காரணம்!

எரிவாயுவை பயன்படுத்துபவர்கள் தற்போது மீண்டும் தட்டுப்பாடு நிலவுவதாக முறைப்பாடு செய்துள்ளனர். இதேவேளை தங்களுக்கு விநியோகஸ்தர்களிடமிருந்து போதியளவு எரிவாயு கிடைக்கவில்லை என விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை போதுமான அளவு எரிவாயு கையிருப்பில் இருப்பதாக தெரிவித்துள்ள லிற்றோ நிறுவனம் இந்த வாரம் விலை குறைப்பு தொடர்பாக எதிர்பார்ப்பு காரணமாக விநியோகஸ்தர்கள் எரிவாயுவை கொள்வனவு செய்யத் தயங்குகின்றனர் போல தோன்றுவதாக லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்பின் பல வியாபாரிகள் கடந்த இரண்டு வாரகாலமாக தங்களுக்கு லிற்றோ எரிவாயு கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

தற்போது எங்களிடம் எந்த கையிருப்பும் இல்லை கடந்த இரண்டு வாரங்களாக நாங்கள் விடுத்தவேண்டுகோளை விட குறைவாகவே எங்களுக்கு வழங்கியுள்ளனர் என கொழும்பை சேர்ந்த ஒரு வியாபாரி தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களாக 5 கிலோ சிலிண்டர்கள் எங்களுக்குக் கிடைக்கவில்லை நேற்று எங்களிற்கு 12.5 சிலிண்டர்கள் கிடைக்கும் எனத் தெரிவித்தனர், ஆனால் நேற்றுவரை அது கிடைக்கவில்லை,அது நிச்சயமில்லை எனவும் வியாபாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு - 5, கொழும்பு 15 பத்தரமுல்ல ஹோமாகம பகுதியை சேர்ந்த வியாபாரிகள் கடந்த நான்கு, ஐந்து நாள்களாக வாடிக்கையாளர்களை திருப்பி அனுப்பியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர். நாட்டில் கையிருப்பு தீர்ந்துபோயுள்ளது போலத் தோன்றுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மற்றுமொரு வியாபாரி லிற்றோ நிறுவனத்திடமிருந்து எரிவாயுவை கொள்வனவு செய்துள்ள விநியோகஸ்தர்கள் அடுத்தவாரமளவில் விலை குறையும் என்ற எதிர்பார்ப்பு காரணமாக போதியளவு எரிவாயுவை கொள்வனவு செய்யவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

தாங்கள் அதிக விலைக்கு கொள்வனவு செய்து குறைவான விலைக்கு விற்பனை செய்யவேண்டும் என்ற அச்சம் காரணமாக விநியோகஸ்தர்கள் போதுமான அளவு கொள்வனவு செய்கின்றார்கள் இல்லை. நவம்பர் ஐந்தாம் திகதி புதிய விலை அறிவிக்கப்பட்டதும் போதுமான கையிருப்பு காணப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

திறைசேரிக்கு செலுத்தவேண்டிய தொகையை லிற்றோ நிறுவனம் செலுத்திவிட்டால் நவம்பர் முதல் வாரத்தில் விலைகள் குறையலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளன.

# 43 ஆயிரத்து 200 கோடி ரூபா சுகாதாரத்துறைக்கு ஒதுக்கீடு!

## வரவு – செலவுத் திட்டத்தில் என்கிறார் நிதி இராஜாங்க அமைச்சர்

எதிர்வரும் வரவு – செலவுத் திட்டத்தில் சுகாதாரத்திற்காக 43 ஆயிரத்து 200 கோடி ரூபாவும் கல்விக்காக 50 ஆயிரத்து 400 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தவிர, பாதுகாப்புச் செலவினங்களுக்காக 36 ஆயிரத்து 700 கோடி ரூபா மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் சமூகப் பாதுகாப்பிற்காக 57 ஆயிரத்து 200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய குறிப்பிட்டார்.

அரச வருமானத்தை 8.5 வீதத்தில் இருந்து 13 வீதமாக அதிகரிக்கவும், அரச வருமானத்தில் 90 வீதத்தை வரி மூலம் பெறவும் வரவு – செலவுத் திட்டத்தில் முன்



மொழியப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி –8 வீதமானது, எதிர்காலத்தில் –3 வீதமாக அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ரஞ்சித் சியம்பலபிட்டிய தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஆவணத்தில் அந்த வருடத்துக்கான அரசாங்கத்தின் மொத்த செலவீனங்கள் 7 லட்சத்து 88 ஆயிரத்து 500 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

# 2023 முதல் செயற்கை நுண்ணறிவு பாடத்திட்டம் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அறிமுகமாகிறது!

யுனெஸ்கோவின் சமீபத்திய அறிக்கைகளுக்கு அப்பாற்பட்ட கல்வி மாற்றத்தை நோக்கி இலங்கை செல்ல வேண்டும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதன்படி அடுத்த வருடம் 10 ஆம் வகுப்பில் செயற்கை நுண்ணறிவு பாடத்திட்டம் புதிதாக சேர்க்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். அனைத்து ஆசிரியர்களும் தொழில் நுட்பத்தில் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

# திலினி பிரியமாலி மோசடி விவகாரம் தேரர் ஒருவர் அதிரடியாகக் கைது!

பொரளை சிறி சுமண தேரர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

திலினி பிரியமாலி செய்தார் எனக் கூறப்படும் நிதி மோசடிகள் தொடர்பான விசாரணைகளின் பின்னர் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.





# 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் ஒக்ரோபரில்

ஒக்ரோபர் மாதம் முழுவதும் நாட்டுக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 40 ஆயிரத்தைக் கடந்துள்ளது. இந்த வருடம் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான சர்வதேச பயணிகளை நாடு வரவேற்றுள்ள நிலையில், ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் 31 வரையான காலப்பகுதியில் 42 ஆயிரத்து 62 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து, ஜனவரி முதல் நாட்டுக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 5 லட்சத்து 68 ஆயிரத்து 258 ஆகப் பதிவாகியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை…!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 169

கேள்வி:–பேச்சுவார்த்தைகளில் புலிகள் ஈடுபட்டிருக்கத்தான் வேண்டுமா?

பதில்:– விளங்கிக் கொள்வதற்காக முன்னைய கேள்வியைப் பிரித்துள்ளேன். ஆம்.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஏனெனில் இந்தியாவுடன் நடந்த முரண்பாடுகளின் பின் சர்வதேச அங்கீகாரம் புலிகளுக்கு அவசியமாக இருந்தது.



சொல்ஹெய்ம்

தமிழர்களின் புலம்பெயர் மக்களின் கலாச்சார அரசியல் விழாக்களில் அந்தந்த நாடுகளின் மந்திரிகள் போன்றவர்கள் கலந்து கொண்டு அவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பது, தனிநாட்டுக் கோரிக்கைகோ, விடுதலைப் புலிகளுக்கோ அங்கீகாரமாகி விடவில்லை. அப்படியான அங்கீகாரம் என்பது அந்தந்த நாட்டினது பல தரப்புகளின் நிர்வாக அலகுகள் இணைந்து, அதனை ஏற்று, அதன்பின் அரசியல்வாதிகளின்அனுசரணைகளுடன் அங்கீகரிக்கப்படுவது.

மேலத்தேய நாடுகள் யாவுமே இந்திய பிராந்தியத்தில் இந்தியாவினது ஆட்சிமையை மதித்து, ஸ்ரீலங்காவின் மேல் அது அதிகாரம் கொள்ளும் என்பதை விரும்பியோ, விரும்பாமலோ ஏற்று நடந்தன. இதனால் இந்தியா ஸ்ரீலங்காவின் விடுதலை புலிகளைப் பயங்கரவாதிகள் எனப் பட்டியல் போட்ட போது சர்வதேச நாடுகள் பல இந்தியாவை மீறி, விடுதலைப் புலிகளுக்கு அங்கீகாரம் கொடுக்க முன் வரவில்லை.

ஆக, இனப் பிரச்சினை நாட்டில் இருக்கின்றது, அதற்குத் தீர்வு அவசியம் என்பதில் அக்கறை காட்டி, அதன் ஒரு பகுதியாக தீர்வுக்கான வடிகாலாக விடுதலை புலிகள் பார்க்கப்பட்டார்கள். அதேசமயம், விடுதலைப் புலிகளும் தாங்கள் தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர்கள் என பறைசாற்றியதும், தாங்களோ, தாங்கள் ஏற்றுக் கொண்ட புலம்பெயர் அமைப்பாளர்களையோ தவிர, வேறு எவரும் சர்வதேசங்களில் ஆதரவுகள் தேடிய பேச்சுக்களில் ஈடுபடக் கூடாது என்ற கோட்பாட்டிலேயே இருந்தனர்.

அதனாலேயே வெளி விவகார அமைச்சராக இருந்து இனப்பிரச்சினை பற்றிப் பேசிய லக்ஷ்மன் கதிர்காமரும், தமிழர் விடுதலைக் கூட்டணியில் சர்வதேச மதிப்பு பெற்ற நீலன் திருச்செல்வமும் கொல்லப்பட்டார்கள். இவற்றால் மேலும் சர்வதேச ரீதியாக அங்கீகாரங்கள் பெறுவதில் சரிந்திருந்த விடுதலைப் புலிகள், அதற்கான வாய்ப்புகளை எதிர்பார்த்ததால் நோர்வே சமாதான பேச்சு சாதுரியமாகப் பாவித்துக் கொள்ள அந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. அது எதார்த்தமானதும் கூட.

பலர் எண்ணுவது போல ஜனாதிபதி சந்திரிக்காவினது விடுதலைப் புலிகளுடனான நேரடிப் பேச்சு வார்த்தைகள் முறிந்த பின்னர், அவர் மூன்றாம் தரப்பாக நோர்வேயை அனுசரனைக்கு அழைத்தார் என்ற அபிப்பிராயம் சரியானது அல்ல. சமாதான பேச்சு வார்த்தைகளுக்கான அனுசரணையாளர்களைத் தேடும் முயற்சி, இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு குந்தகங்கள் விழைத்து, இந்தியப் படைகள் ஸ்ரீலங்காவை விட்டு வெளியேறிய போதே ஆரம்பிக்கப்பட்டன.

அதனைப் பற்றி விடுதலைப் புலிகளிடம் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்ட போது,அவர்கள் ஐ.நா. அனுசரணையைக் கோரினார்கள். ஆனால் ஐ.நா. ஈடுபடுவதை ஸ்ரீலங்கா ஒத்துக் கொள்ளவில்லை. ஸ்ரீலங்கா ஏதாவது சர்வதேச நம்பிக்கை வாய்ந்த அரச சாரா நிறுவனம் ஒன்று அனுசரணைகள் செய்ய ஏற்றுக் கொண்டாலும், இந்தியாவின் படைகளை வெளியேற்றிய வெற்றிக் களிப்பிலிருந்த விடுதலைப் புலிகள் அப்படியான அரசு சாரா நிறுவனம் தங்களுக்குத் தேவையான அங்கீகாரத்தை தராது என்பதால் அதனை விரும்பவில்லை.

புலிகள் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டினால் இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் பொதுநல அமைப்பு நாடுகள் இது விடயத்தில் சம்பந்தப்பட தயக்கம் தெரிவித்தன.



கதிர்காமர்

பிரேமதாஸாவின் அரசுடனான பேச்சு வார்த்தைகளும் முறிந்த காலங்களில், நோர்வே சமாதானப் பேச்சு வார்த்தைகளில் உதவி தருவதற்கான ஆதரவை 1990 காலங்களில் இரு பகுதியினருக்கும் தெரிவித்திருந்ததால் ஜனாதிபதி பிரேமதாஸாவின் நம்பிக்கையாளரான வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீத் ஸ்ரீலங்காவில் பணியாற்றிக் கொண்டிருந்த நோர்வேயின் அரசு சாரா நிறுவனத்தை அணுகி, அவர்கள் அவர்களுக்கு விடுதலைப் புலிகளுடன் இருந்த தொடர்புகளால் போரின் இடையிலும், பின்புற வாசல்களாலும் ஏதும் இணக்கம் ஏற்படுத்தித் தர முடியுமா எனக் கோரிக்கை முன் வைத்தார் என கூறப்பட்டது.

இது உத்தியோகப்பற்றற்ற சில உறவுகளை வளர்த்து, பின்னர் இரு பகுதியினரும் இணைந்து கேட்டால் நோர்வே பரிசீலிக்கும் என்ற நிலைக்கு வளர்ந்தது.

1993 இல் நோர்வே இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் மத்திய கிழக்கிலான சில பிரச்சினைகளில் சமாதான பணிகளில் ஈடுபட்டு, 'ஒஸ்லோவின் இணக்கப்பாடுகள்' என்ற தீர்மானத்தை கொண்டு வந்திருந்ததால் சர்வதேசரீதியில் பெயர் பெற்றிருந்தது. அதன்பின் நோர்வையின் தமிழ் புலம்பெயர் அமைப்புகளும் நோர்வேக்கு சமர்ப்பணங்கள் தர விடுதலைப் புலிகளுக்கும் ஹமீதுக்கும் இடையிலான இரகசிய சந்திப்பு ஒன்றை நோர்வே ஜெனிவாவில் ஏற்படுத்தினாலும், அதில் இணக்கம் காணப்படவில்லை.



ஏ.ஸி.எஸ்.ஹமீத்

1995இல் ஸ்ரீலங்கா அரசு நடக்கும் போரைக் கண்காணிப்பதற்கான குழு ஒன்றில் கனடாவுடனும் நெதர்லாந்துடனும் இணைந்து நோர்வையை செயல்படக் கேட்டாலும் அதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

போர் தொடர்ந்து, அதனிடையே நடந்த பேச்சு வார்த்தைகளும் 1995 வரை பலன் அளிக்கலாமையால், விடுதலைப் புலிகளே நோர்வேயின் அரசு சாரா நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு, தாங்கள் நோர்வேயை சமாதானத் தரப்பாகக் கேட்கிறார்கள் என தெரிவிக்க, அதன்பின் நோர்வே செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் ஊடாக விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்தை தொடர்பு கொண்டு, அந்த உரையாடல்களை வலுப்படுத்த, அரசுத் தரப்புப் பிரதிநிதிகளுடனும், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுடனும் பெப்ரவரி 1996 நோவேயின் பேர்கன் நகரில் கருத்தரங்கு என்ற போர்வையில் சந்திப்பு ஏற்படுத்தப்படுகிறது.

இவை புலன்விசாரணை ஊடகவியலாளர்களால் வெளிப்படுத்தப்பட, பேரினவாதிகளின் எதிர்ப்புகள் கிளம்பினாலும், அத்தருணம், ஸ்ரீலங்காவின் கத்தோலிக்க திருச்சபை இரு பகுதியினருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தி, அரசும் நோர்வையை சமாதானப் பணிக்கு அழைப்பு



நீலன் திருச்செல்வம்

விட வேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் தர,இந்த அழுத்தங்களால் நோர்வேத் தரப்புகள் பின்னர் பதவிக்கு வந்த வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், நீலன் திருச்செல்வம், ஜி.எல்.பிரீஸ், ஜெஹான் பெரேரா போன்றோருடனும் வேறு பல அரசு, எதிர்த்தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை ஏற்படுத்தி, சில முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனாலும் நோர்வேதரப்புகளுக்கு தொடர்புகளில் இருந்த விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் அவர்களது உற்றியோகபூர்வ ஆதரவாளர்களும் தீர்மானங்கள் எடுக்கக்கூடிய உயர்மட்ட மத்திய குழுவினர் அல்ல என்பதால் அப்படியான முக்கியமான விடயங்களுக்குப் பிரபாகரனுடனும் தொடர்புகள் பேணப்பட வேண்டும் என்று அறிவுரைகள் பெற்றதால், பரிஸ் நகரில் இயங்கிய விடுதலைப் புலிகளின் வட்டாரங்களில் பேசியதிலும், சரியான நம்பகமான தொடர்புகள் கிடைக்காமல் அவற்றுக்கான முயற்சிகளில் இருந்தனர்.

அந்த நாட்களில் நோர்வேயின் நாடாளுமன்ற அங்கத்தினராக இருந்த எரிக் சொல்ஹெய்மும் தனது பதவியைத் துறந்து, ஜனவரி – பெப்ரவரி 1998 இல் தனது நண்பர் ஒருவருடன் கொழும்பில் காலம் கழித்த நேரத்தில், அரசியல்வாதிகள் பலரைக் கலந்து, இனப் பிரச்சனை பற்றி அறிந்து, அதில் கவனம் செலுத்தி, நாடு திரும்பிய போது நோர்வே தமிழ்ப் பரப்புகளைச் சந்தித்து, பரிஸுக்கும் விஜயம் மேற்கொண்ட போது, அக்டோபர் 1998 இல் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த மதியுரைஞர் பாலசிங்கத்தை வன்னியில் இருந்து மருத்துவ சிகிச்சைக்காக வெளியே கொண்டு வந்து, தொடர்ந்து உதவிகள் பெறக் கேட்டனர். பின்னர் நடைபெற்ற இரகசிய உயர்மட்டப் பேச்சுக்களால் பாலசிங்கத்துக்கு உதவிகள் பெறப்பட்டு, அவர் வெளியேறி, பின் மதியுரைஞர், எரிக் சொல்ஹெய்மை பிரதான சமாதான பேச்சாளராக இருக்கும்படி கேட்க, நோர்வேத் தரப்பு அவரையும் உள்ளடக்கியது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்ளும் பொறுப்பும் சொல்ஹெய்மிடமே (நோர்வே வெளிவிவகார அமைச்சுடன் அவர் இணைந்திரா விடினும்) விடப்பட்டது.

அதன் பின் 1999 மே மாதம் ஜனாதிபதி சந்திரிகா நோர்வேயைச் சமாதானப் பணிக்கு வரவழைத்தார்.

ஆக, இவ்வளவு படிகளால் ஏற்பட்ட சமாதான பேச்சு வார்த்தைகள் விடுதலைப்புலிகளுக்கு ஒரு சர்வதேச அங்கீகாரத்தை ஏற்படுத்தக் கூடிய மேடையை அமைத்து விட்டிருந்தன. ஆகவே அவர்கள் அதில் ஈடுபட்டு பயணித்தமை புத்தியானது.

(தொடரும்….)

காலைக்கதிர் Kalaikkathir

## பொலிஸாரின் தடையைக் ...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனெனில் பெரும்பாலான கூட்டங்கள் அன்றாட வாழ்க்கையிலோ அல்லது ஏனையோரின் உரிமைகளிலோ குறித்தளவிலான தடங்கல்களை ஏற்படுத்தும் என்பதே அதன் இயல்பாகும். அமைதியான முறையில் ஒன்றுகூடுதல் என்பது ஓர் உரிமையாகும்.

மாறாக அதுவோர் சலுகை அல்ல. எனவே இந்த உரிமைக்கு இடமளிக்க வேண்டிய கடப்பாடு அதிகாரிகளுக்கு உண்டு என்று மன்னிப்புச்சபை அப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ளது.

## மோசமான இரு பஸ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் உட்பட 10 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

ஹட்டனில் இருந்து கண்டி நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸும் கண்டியில் இருந்து ஹட்டன் நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்களில் தனியார் பஸ்ஸின் சாரதியும் அடங்குகிறார்.

அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறும் வீதியின்வளைவுக்குஅருகில்இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும், இரண்டு பஸ்களுமே அதிவேகமாகச் செலுத்தப்பட்டன என விபத்துத் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு பஸ்களிலும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பயணித்தனர் என நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்று வாதுவை சுது வெளிமங்கட பகுதியில் லொறியொன்றும் ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகின இந்த விபத்தில் காயமடைந்த 16 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

களுத்துறையில் இருந்து பாணந்துறை நோக்கி பயணித்த பஸ் மீது, பின்னால் வந்த லொறி பின்பகுதியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து அருகில் உள்ள விற்பனை நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கமராவில் பதிவாகியுள்ளது.

லொறியின் சாரதி தூங்கியதால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். வாதுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## ஆர்ப்பாட்டக்காரர்களின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யுமாறு நாங்கள் இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் உரிமைகளை அமைதியாக பயன்படுத்தவேண்டும் எனவும் கேட்டுகொள்கின்றோம். - என அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கில் சரணாலயம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள், சரணாலயங்கள் மற்றும் மிருகக்காட்சிசாலைகளை பார்வையிட தெற்கிற்கு வர வேண்டிய சூழல் காணப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் பொருத்தமான காணிகளை ஆராயுமாறு வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவித்துள்ளார்.

## உள்ளூராட்சித் தேர்தலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உத்தியோகபூர்வ காலம் 2022 மார்ச் மாதத்துடன் முடிவடைந்ததுடன் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு இருக்கும் அதிகாரத்துக்கு அமைய, அதன் ஆட்சிக்காலம் நீடிக்கப்பட்ட ஒரு வருடகாலம் 2023 மார்ச் 19ஆம் திகதியுடன் நிறைவடைய இருக்கின்றது என்பது அறிந்த விடயம்.

அதேபோன்று உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுவதற்கு காரணம் தெரிவிக்கும் வகையில் பல்வேறு திருத்த யோசனைகளை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுவது இரகசியமான விடயமல்ல. அந்த யோசனைகளில் சில யோசனைகள் நியாயமானவையாக இருந்தாலும் அதற்றை செயற்படுத்துவதற்கு எடுக்கப்படும் காலத்துக்கமைய மற்றும் இவ்வாறான திருத்தங்களால் கடந்த காலங்களின் அனுபவங்களைக் கொண்டு பார்க்கும்போது, இந்த நடவடிக்கையின் இறுதி பெறுபேறாக இருப்பது நாள் குறிப்பிடாமல் தேர்தல்லை ஒத்திவைப்பதாகவே அமைந்துள்ளது.

அதனால் இந்த நிலைமையை தவிப்பதற்காக, உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் தற்போது அதிகாரம் இருக்கும் ஒரே நிறுவனமான உங்கள் ஆணைக்குழு, விரைவாக உள்ளூராட்சி மன்ற தேர்தல் வாக்களிப்புக்கு அறிவிப்பு செய்தால் அதனை பிற்போடுவதற்கு எந்த நிறுவனத்துக்கும் சந்தர்ப்பம் கிடைக்கப்போவதில்லை. இதற்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு தேர்தலை அறிவிப்பு செய்வதற்கு தடையாக இருந்த 2022 தேர்தல் வாக்காளர் இடாப்பு, 2022 ஒக்டோபர் 31ஆம் திகதியாகும் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் என நம்புகின்றோம்.

அதனால் விரைவாக தேர்தலை அறிவிப்பு செய்து, மக்களின் வாக்குரிமையை பாதுகாத்துத்தருமாறு உங்களையும் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களிடமும் கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு இல்லாவிட்டால், ஏதோ ஒரு முறையில் தேர்தலை ஒத்திவைக்க முயற்சிக்கும் நோக்கில் திருத்தம் ஒன்றை கொண்டு வருவதன் ஊடாக, மீண்டும் தேர்தலை பிற்போடவேண்டிய நிலை ஏற்பட்டால், தேர்தல் ஆணைக்குழு மீதும் குற்றம் சுமத்தப்படுவதை தவிர்க்க முடியாமல் போகும்.

அத்துடன் அரசமைப்பின் 21ஆம் திருத்தம் நாடாளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றபோதும் ஆணைக்குழுவுக்கு, புதிய ஆணைக்குழு நியமிக்கப்படும்வரை, தங்களின் அடிப்படை கடமை மற்றும் சாதாரண செயற்பாடுகளின் ஒரு பகுதியான உள்ளூராட்சி மன்ற தேர்தலை அறிவிப்பு செய்வதற்கு எந்த தடையும் இல்லை என நம்புகின்றோம். அதனால் இது தொடர்பாக நீங்கள் விரைந்து கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## வரி அதிகரிப்புக் கிட்டவே ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

அத்தியாவசிய பொருள்கள் சிலவற்றின் விலைகள் நூற்றுக்கு 200 - 300 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. நாட்டின் வருமானத்தை அதிகரிக்க வரி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், வரிகள் ஊடாகக் கிடைக்கும் வருமானம் 11 சதவீதமாக அதிகரிக்கும் என அரசாங்கம் கூறுகிறது. இது பகல் கனவாகும். இதனை செய்யவே முடியாது. - எனவும் தெரிவித்தார்.

செலவுகளைக் கருத்திற்கொண்டு அத்தியாவசிய தேவைகளை மக்கள் நிறுத்துவார்களாக இருந்தால், பாதுகாப்புத்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் செலவுகளையும் குறைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir

# அரசின் பொறுப்பற்ற தன்மைக்கு எதிராக வீதிக்கிறங்கி போராட்டத்தில் ஈடுபடுவோம்!

## விமல் எச்சரிக்கை



பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மைக்கு எதிராக எதிர்வரும் வாரம் வீதிக்கிறங்கி போராட்டத்தில் ஈடுபடுவோம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிச கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சமூகக் கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும், அவர் தலைமையிலான பொதுஜன பெரமுன அரசாங்கத்துக்கும் கிடையாது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக் கூற வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது பொருளாதார மீட்சிக்கான இறுதி தீர்வு என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுக் கொள்கிறார். கடன் மறுசீரமைப்பையும், வரி அதிகரிப்பும் நாணய நிதியத்தின் பிரதான நிபந்தனைகளாகும்.

நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மறுசீரமைப்பது சாத்தியமாகக் காணப்பட்டாலும் சர்வதேச பிணையகங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்களை மறுசீரமைப்பது சவால்மிக்கதாகும். இலங்கை 2007 ஆம் ஆண்டு முதன் முதலாக சர்வதே பிணையகங்களிடமிருந்து கடன்பெறும் தீர்மானத்தை எடுத்தது. 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 350 கோடி அமெரிக்க டொலர் கடனாக பெற்றுக்கொள்ளப்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஆட்சியமைத்த நல்லாட்சி அரசாங்கம் நான்கரை வருட காலத்துக்குள் சர்வதே பிணையகங்களிடமிருந்து 12.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக பெற்றுக்கொண்டுள்ளது. இந்த கடன்களை மறுசீரமைப்பது சவால்மிக்கதாகும். இவற்றைக் கருத்திற்கொண்டு தான் சர்வதேச நாணய நிதியம் 290 கோடி டொலர்களை கடனாக வழங்குவதாகக் குறிப்பிட்டு கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளது. அரசாங்கமும் அந்த நிபந்தனைகளை அமுல்படுத்தி நடுத்தர மக்களை பொருளாதார ரீதியில் மேலும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

உலக வங்கியின் ஆலோசனைக்கமைய இலங்கை நடுத்தர வருமானம் பெறும் நாடாக அறிவிக்கப்பட்டது, தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கமைய இலங்கை குறைந்த வருமானம் பெறும் நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைத் தவிர்த்து பிற நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியாத சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டு ஆர்ஜென்டீனா வங்குரோத்து நிலைஅடைந்தது. சர்வதேச நாணய நிதித்தின் ஒத்துழைப்பைப் பெற்றும் ஆர்ஜென்டினாவால் முன்னேற்றமடைய முடியவில்லை. ஐந்து முறை தொடர்ந்து வங்குரோத்து நிலையை அடைந்த வண்ணம் உள்ளது. 1980 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை பல அரசாங்கங்கள் ஆட்சியில் இருந்தும் ஆர்ஜென்டீனா வங்குரோத்து நிலையில் இருந்து மீளவில்லை. இந்த நிலைமைக்கு இலங்கையை கொண்டு செல்லும் வழிமுறையே ஏற்படுத்தப்படுகிறது.

நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மின்சாரக் கட்டணம் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதால் கட்டணம் செலுத்த முடியாத நிலை ஏற்படும். வெகுவிரைவில் நாட்டில் பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்கும். நாட்டு மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். அவ்வாறாயின் நாட்டு மக்கள் பட்டினியிலா வாழ்வது?

பொருளாதாரப் பாதிப்பிற்கு மத்தியில் நாட்டுக்கு எதிரான திட்டங்களைச் செயற்படுத்த ஒருதரப்பினர் முயற்சிக்கிறார்கள். எம்.சி.சி, எட்கா ஒப்பந்தத்தை பெயர்மாற்றி கைச்சாத்திட அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளுக்கு எதிராக எதிர்வரும் வாரம் வீதிக்கு இறங்கிப் போராடுவோம்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் பாதிப்பிற்குள்ளாக்கும் வகையில் 2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிப்போம் என குறிப்பிடும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அமைச்சு பதவிகளை வழங்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததும், இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் வரவு – செலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள். – என்றார்.

# 2023 ஆம் ஆண்டு அரசின் மொத்தச் செலவுகள் 7 ஆயிரத்து 885 பில்லியன் ரூபாவாக மதிப்பீடு!

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு



வரவு – செலவுத் திட்டத்தில் பொருளாதார இறையாண்மையைப் பாதுகாத்து மக்களை வாழவைக்கும் சவாலை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் எதிர்கொள்ளும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார் என நிதியமைச்சு அறிவித்துள்ளது.

வரவு – செலவுத் திட்டம் இம்மாதம் 14 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் மொத்த செலவு 7 ஆயிரத்து 885 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட செலவீனத்துடன் ஒப்பிடுகையில் இது ஆயிரத்து 785 பில்லியன்ரூபா அதிகரிப்பு எனவும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார்.

# அம்பாந்தோட்டையில் உள்ள ஆதரவற்ற குடும்பங்களுக்கு இந்தோனேசியாவால் உணவுப்பொருள் பொதிகள் கையளிப்பு

அம்பாந்தோட்டையில் உள்ள ஆதரவற்ற குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகளை வழங்கியதாக கொழும்பில் உள்ள இந்தோனேசியக் குடியரசின் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை இந்தோனேசிய நட்புறவுச் சங்கத்துடன் தூதரகம் இணைந்து தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தகுதியுள்ள இலங்கையர்களுக்கு ஒற்றுமை மற்றும் நட்புறவின் வடிவமாக உலர் உணவுகளை விநியோகிக்கும் கூட்டு தொண்டு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கைக்கான இந்தோனேசியாவின் தூதுவர் டீவி குஸ்டினா டோபிங் மற்றும் இலங்கை இந்தோனேசிய நட்புறவு சங்கத்தின் தலைவர் மர்லீனா லக்சனா ஆகியோரின் அனுசரணையில் இந்த தொண்டு நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

அம்பாந்தோட்டையில் உள்ள கிராமங்களில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் ஆகிய நான்கு மத சமூகங்களைச் சேர்ந்த தேவையுடைய இலங்கையர்களுக்கு இந்தோனேசியாவின் தூதுவர் டீவி குஸ்டினா டோபிங் பல்வேறு வகையான உலர் உணவுகள் அடங்கிய 160 பொதிகளை வழங்கினார்.



# மசகு எண்ணெய்க் கப்பலுக்கு 67 கோடி ரூபா தாமதக் கட்டணம்!

## செலுத்த வேண்டியுள்ளது என தயாசிறி தகவல்

நாட்டை வந்தடைந்துள்ள மசகு எண்ணெய் கப்பலொன்று கடந்த 40 நாள்களாக கடலில் நங்கூரமிடப்பட்டுள்ளது. இந்தக் கப்பலுக்கான தாமதக் கட்டணமாக 67 கோடி ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது.

இந்தக் கப்பலிலிருந்து மசகு எண்ணெய் தரையிறக்கப்படாமைக்கான காரணம் என்ன என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அத்தோடு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற இது போன்ற பொறுப்பற்ற செயற்பாடுகளுக்கும், மக்கள் மீது பிரயோகிக்கப்படுகின்ற அடக்குமுறைகளுக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டத்திற்கு சுதந்திர கட்சி முழுமையான ஆதரவை வழங்குகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சு.க. தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாட்டில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதை ஒருபுறம் வைத்து விட்டு, மக்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதிலேயே அரசாங்கம் அவதானம் செலுத்தி வருகிறது.

கடும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்ட மக்கள் அவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாமையாலேயே ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து ஆட்சி மாற்றத்தை கோரினர். மக்களால் இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் மீது தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை.

இவ்வாறான மக்கள் போராட்டங்களால் ஆட்சியைப் பொறுப்பேற்ற அரசாங்கம் தற்போது ராஜபக்ஷக்களைப் பாதுகாப்பதற்காக மக்களின் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்துக்கொண்டிருக்கிறது. மக்கள் மீதான இவ்வாறான அடக்குமுறைகளை உடனடியாகக் கைவிடுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

நாட்டை வந்தடைந்த மசகு எண்ணெய் கப்பலொன்று கடந்த 40 நாள்களாகக் கடலில் நங்கூரமிடப்பட்டுள்ளது. 40 நாள்களுக்கும் அந்தக் கப்பலுக்கான தாமதக் கட்டணமாக 67 கோடி ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது.

இந்தக் கட்டணம் அப்பாவி பொது மக்களிடமிருந்து பெற்ற வரிப்பணத்திலேயே கட்டப்படவுள்ளது. கப்பலில் சுமார் ஒரு லட்சம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் காணப்படுகிறது. குறித்த நிலக்கரியை தரையிறக்கியிருந்தால் சுத்திகரிப்புப் பணிகளை தடையின்றி முன்னெடுத்திருக்க முடியும்.

அரசாங்கத்தின் இது போன்ற செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முழுமையான ஆதரவை வழங்கும். பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசிய கட்சி இணைந்து அமைத்துள்ள அரசாங்கத்துக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சு.க. ஆதரவளிக்காது. மாறாக ராஜபக்ஷ குடும்ப ஆட்சியையும், ஐ.தே.க. அரசாங்கத்தையும் எதிர்க்கும் சகல தரப்பினரையும் ஒன்றிணைத்து நாம் பாரிய கூட்டணியொன்றை உருவாக்குவோம். எல்லை நிர்ணயம் தொடர்பில் தற்போது பேச ஆரம்பித்துள்ளமைக்கான காரணம் தேர்தலைப் பிற்போடும் நோக்கத்திலேயே ஆகும். அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு தேர்தல் ஆணைக்குழு ஒத்துழைப்பு வழங்கக்கூடாது என்று வலியுறுத்துகின்றோம். பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் ஏற்கனவே அமைக்கப்பட்ட தெரிவுக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்தி, அதற்கமைய தேர்தலை நடத்துமாறு கோருகின்றோம். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.11.2022இல் வெளியிடப்பெற்றது.